1969 செப்டம்பர் 12]

சுற்றறிக்கை ஏதேனும் கடந்த 1968 ஆகஸ்டு, செப்டம்பர் திங்களில் தமிழக அரசுப் பள்ளிகளுக்கு அனுப்பியிருப்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. டி. மார்டின் : பேரவைத் தலைவர் அவர்களே, கோயம் புத்தூர் மாவட்டத்திலுள்ள பள்ளிகளுக்கு இந்த விதமான சுற்றறிக்கை அனுப்பப்பட்டதா ? அதன் காரணமாக சைன்ஸ் பாடம் சொல்லிக்கொடுத்த ஆசிரியை தன்னுடைய பதவியை இழந்ததாகக் கூறப்படுவது உண்மையா ? இதுபற்றிய விவரம் அறியலாமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை என்றுதான் பதில் சொன்னார்களே.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மனை இயல் பி.டி. படித்த ஆசிரியர்கள் விஞ்ஞான பாடம் சொல்லிக்கொடுக்கத் தகுதியற்றவர்கள் என்ற சுற்றறிக்கை விடப்பட்டதா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்டார்கள். இல்லை என்று பதில் சொன்னேன். இப்பொழுது இருக்கிற விதிப்படி பி.டி. பட்டம் பெற்றவர்கள் எந்தத் துறையிலே அவர்கள் பாடம் கற்றார்களோ, அந்தத் துறையிலே தான் பாடம் சொல்லிக்கொடுக்க வேண்டும். மன இயல் துறையிலே பி.டி. படித்தவர்கள் பொது விஞ்ஞானத் துறையிலே பாடம் சொல்லிக்கொடுக்கிறார்கள். 1969 பிப்ரவரி திங்களில் 11—1—1970-க்குள் மன இயல் பட்டம் பெற்றவர்கள் பொது விஞ்ஞானம் சொல்லிக்கொடுக்கலாம் என்ற உத்திரவு போடப்பட்டிருக்கிறது. இதுவும் மன இயல் பாடம் பெற்றவர்களுக்குச் சாதகமான உத்தரவுதான்.

பள்ளித் துணை ஆய்வாளர்களின் அலுவலகங்கள்

*** 231 வின.—திரு. சி. கோவிந்தராசன் :** மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவிற்கு விடையளிப்பாரா—

தென்னார்க்காடு மாவட்டத்தில் பள்ளித் துணை ஆய்வாளர்களின் அலுவலகங்கள் எல்லா வட்டாரத் தலைமையிடங்களிலும் அமைக்க அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. சி. கோவிந்தராசன் : பள்ளித் துணை ஆய்வாளர்களின் அலுவலகங்கள் அந்தந்த வட்டாரத் தலைமையிடங்களில் இல்லாத காரணத்தினால், பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்கள் 'கேர்' பொருளை வாங்குவதற்குச் செலவு அதிகம் ஆகிறது. இரண்டு, மூன்று சரகங்களுக்கும் சேர்ந்து டெபுடி இன்ஸ்பெக்டர் இருக்கிற காரணத்தினால், ஆங்காங்கு போய் இன்ஸ்பெக்ட் பண்ணுவதற்கு செலவு அதிகம் ஏற்படுகிறது. எனவே, அந்தந்த வட்டாரத்திலே

டெபுடி இன்ஸ்பெக்டர் ஆப் ஸ்கூல்ஸ்-ஐ ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : 372 ஊராட்சி ஒன்றியங்களில் இப்போது 300 ஊராட்சி பகுதிகளில் துணை ஆய்வாளர்கள் இருக்கிறார்கள். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு துணை ஆய்வாளர் இருப்பது என்பதுதான் கொள்கை என்று இருந்தால் இப்போது உள்ள நிதி நெருக்கடி காரணமாக இன்னும் 72 துணை ஆய்வாளர்கள் போடுவதில் காலதாமதம் ஏற்படுகிறது. சரகங்களைப் பொறுத்தவரையில் 24 சென்னை, மதுரை, கோயம்புத்தூர் போன்ற நகரங்களில் இருக்கின்றன. 372-க்கு இப்போது 300 சரகங்கள் இருக்கின்றன. இன்னும் 72 சரகங்கள் ஏற்படுத்தவேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. 47 துணை ஆய்வாளர்களை நியமிக்கவேண்டுமென்று நிதித் துறையினர் ஒரு வரைவு அனுப்பி இருக்கிறார்கள். இதிலே 20 துணை ஆய்வாளர்களை நியமிப்பதற்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது. படிப்படியாக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒவ்வொரு சரகம் என்ற நிலைமை ஏற்பட்டு ஒரு சரகத்திற்கு ஒரு துணை ஆய்வாளர் அமையும்படியான நிலைமை நாளடைவில் ஏற்படும்.

திரு. கொ. இரா. ஞானசம்பந்தன் : தலைவர் அவர்களே, இம்மாதிரி ஏற்படுத்துகின்ற வரையில் 'கேர்' பொருளை எடுத்துச் செல்வதற்கு ஆசிரியர்களுக்கு டி.ஏ. அனுமதிப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையைப்பற்றித் தனியாக எழுதியனுப்பினால் பரிசீலிக்கலாம்.

ஆசிரியர்களுக்கு படிகள் வழங்கல்

* 232 வினா.—**திரு. எம். பூபதி :** மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) என்.ஜி.ஓ.-க்களுக்கு கொடுக்கப்படும் நகர ஈட்டுப் படிக்கும் தனியார் துறைப்பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு அளிக்கப்படும் நகர ஈட்டுப்படிக்கும் உள்ள வித்தியாசம் என்ன ?

(இ) அவ்விரு பிரிவினர்களுக்கும் நகர ஈட்டுப்படி எந்த எந்த தேதிகளிலிருந்து அமல் நடத்தப்படுகிறது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) வேறுபாடு எதுவும் இல்லை.

(இ) (1) சென்னை மாநகரத்திலுள்ள அரசாங்க ஆசிரியர்களுக்கு 1967-ம் ஆண்டு அக்டோபர் முதல்.

(2) சென்னை மாநகர எல்லையை அடுத்துள்ள பரங்கிமலை, பல்லாவரம், தாம்பரம், சித்தனப்பாக்கம், ஆவடி, அம்பத்தூர்,